**இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபை - 2021**

**……………………………………………………………………………**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**……………………**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**……………………………………………**

இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**……………………………………………………………**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

**………………………………………………………………………………………………………**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

..........................................................................................

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இரக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள்

தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | "தேசிய விவசாய ஆராய்ச்சி திட்டம் (NARP-NUS) - 2021" செயற்திட்டத்திற்காக நெல்லும் தானியமும், சேதனப் பசளைகள் உணவு, மரக்கறி, பழங்கள்,மிளகாய், வெங்காயம், உருளைக் கிழங்கு ஆகிய பயிர்ச் செய்கையை மேம்படுத்துதல், விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சின் மூலம் கொள்கைச் சபைக்கு 2021 ஆம் ஆண்டில் ரூபா 22,874,537 வழங்கப்பட்டிருந்தது. இதில் மீளாய்வாண்டின் போது ரூபா 12,573,033 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. மிகுதி ரூபா 10,301,504 பணம் அந்த இராஜாங்க அமைச்சிற்குத் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சிடமிருந்து பெற்ற பணமும் மேற்கொள்ளப்பட்ட செலவுகளும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இது சம்பந்தமாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 11 இன் 106 (அ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அமைச்சிடமிருந்து பெற்ற பணமும் மேற்கொள்ளப்பட்ட செலவுகளும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களுக்காக விளைதிறன் ஆயுட் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாததன் காரணமாக 5 சொத்துக்கள் வகுப்பின் ரூபா 31,127,619 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அதற்கிணங்க மதிப்பீடு செய்யப்பட்ட தவறினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்தம் செய்து நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் கணக்காண்டின் போது உரிய சொத்துக்களில் செம்மையாக்கல்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களை மீள்மதிப்புச் செய்தல் வேண்டும். |

**1.5.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கொள்கைச் சபையின் முன்னாள் தலைவரது பதவிக் காலம் 2018 நவம்பர் 07 ஆந் திகதி முடிவுடைந்திருந்த போதிலும் 2018 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக ரூபா 197,600 தொகையான சம்பளங்களும் படிகளும் செலுத்தப்பட்டிருந்தன. | இணங்கிக் கொள்கிறேன். இது சம்பந்தமாக SLCARP/AD/AL/2021 ஆம் இலக்க 2021-03-31 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்பொழுது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | உரிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2017- 2021 காலப்பகுதியின் போது வெளிநாட்டு பட்டப் பின் படிப்பிற்காக அனுப்பிவைக்கப்பட்ட தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் 30 ஆராய்ச்சியாளர்கள் தொடர்பாக கொள்கைச் சபைக்குத் தெரிவிக்காது இந்த நாட்டிற்கு வருகை தந்திருந்த காலப்பகுதிக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 12,434,888 தொகையான வாழ்க்கைப்படி அறவிடப்படாது மீதியாகக் காணப்பட்டது. | இந்த உத்தியோகத்தர்கள் தற்பொழுது கடமையாற்றுகின்ற நிறுவனத் தலைவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்காக முதலாவது கடிதம் ஞாபகப்படுத்தல் கடிதம் 01 ஆவது ஞாபகப்படுத்தல் கடிதம் என்பன அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு பல உத்தியோகத்தர்கள் பதிலளித்துள்ளனர். | இந்த நாட்டிற்கு வருகை தந்திருந்த காலப்பகுதிக்காக வழங்கப்பட்டிருந்த வாழ்க்கைப் படியை உடனடியாக அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) விவசாய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக 3 ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் 3 பல்கலைக் கழகங்களுக்கும் வழங்கப்பட்ட பணத்திலிருந்து கொள்கைச் சபைக்குத் தீர்த்துவைக்கப்பட வேண்டிய ரூபா 659,131 பணத்தை இதுவரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2006 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்டன. | இணங்கிக் கொள்கிறேன். சபையினால் அறவிட வேண்டியிருந்த ரூபா 659,131 பணம் தொடர்பாக சபையிடம் காணப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தகவல்களை தேடிப்பார்த்தல் இடம்பெற்று வருவதனால் அதன் இறுதிமுடிபின் பேரில் அடுத்துவரும் கணக்காண்டிற்குள் இப்பணத்தை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,280,365 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 5,675,077 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 394,712 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு திறைசேரி மானியம் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**..........................................**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

**..................................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்**<br>**..................................** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**<br>**..............................** | **சிபாரிசுகள்**<br>**................** |
|---|---|---|
| (அ) 2017 ஒக்தோபர் 04 ஆந் திகதிய அமைப/17/1992/728/34 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மலேசியா, தாய்லாந்து, பிலிபைன்ஸ் ஆகிய நாடுகளில் ஒரு ஆண்டிற்கு 30 நபர்கள் வீதம் 5 ஆண்டுகளுக்குள் 150 ஆராய்ச்சியாளர்களை கலாநிதிப் பட்டத்தை (Ph.d) பயில்வதற்காக அனுப்பிவைக்க வேண்டியதுடன் அவர்களால் இலங்கையின் விவசாயதுறை முகம் கொடுக்கின்ற அல்லது எதிர்காலத்தில் முகங்கொடுப்பதற்கு உள்ள சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்தி தமது ஆராய்ச்சி தலைப்புக்களை தெரிவு செய்தல் வேண்டும். எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டளவில் 4 ஆண்டுகள் கடந்திருந்தும் கொவிட்தொற்று நோய் நிலைமை காரணமாக அதற்காக 79 ஆராய்ச்சியாளர்கள் மாத்திரம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தார்கள். இலங்கையின் விவசாயத்துறையின் முன்னேற்றத்திற்காக மேம்படுத்தப்பட வேண்டியவை என இனங்காணப்பட்டுள்ள விவசாயத்தை இயந்திரமயப்படுத்தல் மற்றும் சேதனப் பசளை விவசாயத் துறையின் ஆராய்ச்சி தலைப்புக்களை 8 உத்தியோகத்தர்கள் மாத்திரம் தெரிவு செய்திருந்தார்கள். | ஆராய்ச்சி நிறுவனங்களின் கடமைகள் தடைப்படாத வகையில் ஒரு உத்தியோகத்தர் பயிற்சி பெற்றதன் பின்னர் மற்றைய உத்தியோகத்தர் பயிற்சிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தார். மேலும் 2018, 2019, 2020 ஆகிய மூன்று ஆண்டுகளில் 90 ஆராய்ச்சியாளர்களை அனுப்பிவைக்க முடியுமாக இருந்த போதிலும் 2020 திசெம்பர் மாதம் வரை 76 நபர்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தார்கள். 2020, 2021, 2022 ஆகிய ஆண்டுகளில் Covid-19 தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதார நிலைமையின் காரணமாக புதிய மாணவர்களை அனுப்பிவைப்பதில் சிக்கல்கள் காணப்பட்டன. உத்தியோகத்தரின் நிறுவனத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் ஆராய்ச்சித் தலைப்பு வழங்கப்படுவதனால் 8 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேதனப் பசளை விவசாயம் மற்றும் விவசாயத்தை இயந்திரமயப்படுத்தல் ஆய்வுகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தனர். | ஆராய்ச்சித் தலைப்பைத் தெரிவு செய்வதற்காக ஆராய்ச்சியாளர்களை ஊக்கப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கமத்தொழில் ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக நிதி வழங்குகின்ற ‘‘தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி திட்ட (NARP)’’ செயற்திட்டம் மேற்கொள்கின்ற இறுதி ஆராய்ச்சிகளின் அறிக்கை சபையினால் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 2015 இலிருந்து 2020 வரையான காலம் தொடர்பாக பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட 18 ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கை 2021 ஆம் ஆண்டின் இறுதிவரையும் காலரீதியாக பெற்றுக்கொள்ளப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | விவசாய ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக நிதியை வழங்குகின்ற ‘‘தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி திட்ட (NARP)’’ செயற்திட்டம் மேற்கொள்கின்ற இறுதி ஆராய்ச்சிகளின் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவற்றினை மீளாய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | ஆராய்ச்சிகளுக்குரிய இறுதி அறிக்கைகளை உரிய காலத்தில் பெற்று மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | கொள்கைச் சபையினால் சேதனப் பசளை கமத்தொழிலுக்காக கவனம் செலுத்துவதன் முக்கியத்துவத்தை இனங்கண்டு இத்துறையில் ஆராய்ச்சிகளை அதிகரிக்க வேண்டிய 07 முன்னணி துறைகள் இலங்கையில் காணப்படுகின்ற ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் சேதனப் பசளை கமத்தொழில் கொள்கை மற்றும் நிகழ்காலத்தில் சந்தையில் காணப்படுகின்ற சேதனப் பசளை உணவுகளின் தரமான நிலைமை சம்பந்தமாக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆர்வங்காட்டியிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து சேதனப் பசளை விவசாயம் தொடர்பாக கவனம் செலுத்தி 2022 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சிகளை திட்டமிடும் போது சேதனப் பசளை கமத்தொழில் ஆராச்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டின் போது 2 செயற்திட்டங்களுக்காக வழங்கப்படுகின்ற ‘‘தேசிய கமத்தொழில் ஆராய்ச்சி திட்டத்தின் (NARP)’’ கீழ் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. | திட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக ஆராய்ச்சி நிறுவனங்களை ஊக்கப்படுத்துதல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

## 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் அமுல்ப்படுத்தப்பட்ட திட்டத்தின் பிரகாரம் கமத்தொழில் மற்றும் அது சார்ந்த பிரிவுகளின் சிக்கல்கள்/ உருவாகி வருகின்ற போக்குகள் தொடர்பான 3 செயலமர்வுகள் மற்றும் 1 வருடாந்த உரையாடல் (Annual Dialogue) நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் பணம் கிடைக்காமை மற்றும் கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக என குறிப்பிட்டு 2021 ஆம் ஆண்டில் அந்த சம்மேளனம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | Covid-19 தொற்று நோய் காணப்பட்டதன் காரணமாக உத்தியோகத்தர்களை ஒன்று சேர்க்க முடியாமை மற்றும் பணம் கிடைக்காமையின் காரணமாக இந்த சம்மேளனத்தை நடாத்த முடியாதிருந்தது. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உள்ள இயலுமை தொடர்பாக மீளாய்விற்கு உட்படுத்தி திட்டங்களை திருத்தம் செய்தல் வேண்டும். |